


# குப்பை அள்ளும் விழிப்புணர்வு பேரணி

## என்.சி.சி. மாணவர்கள் பங்கேற்பு

**வேலூர், டிச. 9-**

பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த திட்டமான ஸ்வச்தா பக்வாடா என்னும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டத்தில் புதுமையான முறையில், அதாவது ஜாக்கிங் செய்து குப்பைகளை அள்ளும் விழிப்புணர்வு நிகழ்ச்சி வேலூரில் நேற்று நடத்தப்பட்டது.

வேலூர் காந்திநகரில் உள்ள 10-வது தமிழ்நாடு பட்டாலியன் என்.சி.சி. சார்பில் ஊரீசு கல்லூரி என்.சி.சி.யும் முத்துரங்கம் அரசு கலை கல்லூரி என்.சி.சி.யும் இணைந்து இதை நடத்தின. ஊரீசு கல்லூரியில் துவங்கிய இந்த பேரணியில் வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் இணைந்து பங்கேற்றனர். மொத்தம் 350 மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். ஆபீசர்ஸ் லைன் ரோடு வழியாக பழைய பஸ் நிலையத்துக்கு சென்ற மாணவர்கள், வழிநெடுக ஜாக்கிங் செய்தபடி குப்பைகளை அள்ளி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

இதன் தொடக்க நிகழ்ச்சிக்கு 10-வது பட்டாலியனின் கமாண்டிங் அதிகாரி கர்னல் டி.பி.சார்லஸ் தலைமை தாங்கி பேசினார். ஊரீசு கல்லூரியின் துணை முதல்வர் ஆனி கமலா பிளாரன்ஸ் தொடங்கிவைத்தார். பேராசிரியை சி.ஞானலின் ஷைனி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். ஊரீசு கல்லூரி பாதுகாப்புதுறை தலைவர் பேராசிரியர் திருமாறன் உடன் கலந்துகொண்டார்.

திங்கள்,
டிசம்பர் 9, 2019
தினசெய்தி